# சைவமும் தமிழிசையும்

## பிரிவு 4

சிவனை முழுமுதல் கடவுளாகப் பெற்றவர்கள் சைவர்கள். சிவனை முதல் தெய்வமாகக் கொண்ட சமயமே சைவ சமயம் ஆகும். இந்தியாவிலும் இலங்கையிலும் இன்று புலம்பெயர் தேசங்கள் பலவற்றிலும் சைவர்கள் வாழுவதனால் சைவ சமயமும் இந்த தேசங்களில் எல்லாம் சிறந்து விளங்குகின்றது. சைவத்தில் அன்பு, அறம், ஒழுக்கம், கிரியை ஆகிய விழுமியங்கள் சிறந்து மிளிர்கின்றன. சைவசமயத்தில் வழிபற்றி இறைவனுள் கலந்த மெய்யடியார்கள் பலரும் மேற்சொன்ன நான்கு விழுமிய நிலைகளில் ஒன்றையோ அல்லது இரண்டையோ அல்லது மேலும் இரண்டையுமோ கைக்கொண்டு ஒழுகியவகள் ஆவர். இவற்றுள் முக்கியமாக அன்பு நிலையும் அடுத்து கிரியை நிலையும் பிராத்தனைப் பாடல்களோடு நெருங்கிய தொடர்புடையவை. இறைவனில் கொண்ட அன்பிற்கு பக்தி என்றுபெயர். அவ்வாறு பக்தியில் சிவனை வழிபடும்போது இறைவன் நாமங்களை, இறைவன் செய்த அற்புதங்களை, இறைவன் இருக்கும் தலத்தின் சிறப்புகளை, இறைவனிடம் கேட்க நாம் பிரியப்படுவற்றை ஓசை நயம் மிக்க, பொருள்நயம் மிக்க வார்த்தைகளால் கேட்கின்றபோது அவை பாடல்களாகின்றன தமிழர்களாகிய நாம் அவற்றை எமது தாய்மொழியாம் தமிழ்மொழியில் இசையோடு, இசைக்கருவிகளின் துணையோடு பாடுகின்ற போது அவை தமிழிசை ஆகின்றன.

எம் இறைவனாகிய சிவன் தமிழிசையை விரும்புகிறான் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. எங்கள் நாயன்மார்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட் கொண்ட சிவபிரான், சுந்தரரிடம், சுந்தரா! நமக்கு மண்மேல் மிக அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் சொற்றமிழ் பாடுக! என்று வேண்டிநின்றார். மணிவாசகப் பெருமானிடமும் சிவபெருமான் பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக என மிக விரும்பிக் கேட்டுக்கொண்டார். இவருடன் இவரது மகனாகிய முருகப் பெருமானும் அருணகிரிநாதரிடம் முத்தைத் தரு என அடி எடுத்துக்கொடுத்து தன்னைப் புகழ்ந்து பாடும்படி கேட்டுக்கொண்டார். இன்று சைவ சமயத்துள்ளேயே முருகன், பிள்ளையார், அம்பாள், சூரியன் ஆகிய தெய்வங்களுக்குமான வழிபாடு இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இத்தன்மை இலங்கை மண்ணின் தனிச்சிறப்பாகும். அத்தன்மையே ஈழத்தமிழ்ச் சைவர்கள் புலம் பெயர்ந்து வாழும் தேசமெங்கும் காணப்படுகிறது. அவர்களது ஆலயங்களிலும் இத்தன்மையே விளங்குகிறது.

இவ்வாறு சைவத்தில், சைவ சமய முழு முதல் கடவுள் உட்பட அனைத்துத் தெய்வங்களாலும் மிகவும் விரும்பி, அடியார்களின் ஒரு முக்கிய வழிபாட்டு வழிமுறையாக விளங்கும் தமிழிசையின் சிறப்புகள் யாவை என்று நோக்குவது பொருத்தமானதாகும். தமிழ் மொழி தோன்றி வளர்ந்தபின் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை தமிழிசை அவன் வாழ்வில் இரண்டறக் கலந்தே இருக்கிறது. தாலாட்டு, திருமணப் பாடல்கள், நலங்குப் பாடல்கள், ஒப்பாரி என அவை அமைகின்றன. இதற்கு எல்லாம் கொடுக்கும் முக்கியத்துவங்களை விட இறைவனை, சிவனைப் பிரார்த்திக்கும் பக்தி. இசைக்கு, தமிழிசைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். எங்க காலம் முதல் இது ஆரம்பித்தாலும் காரைக்காலம்மையார் அவர்களே சிவனைப் பாடிய முதல் அரிய தமிழிசையாளராக பக்திப் பனுவல்களைத் தோற்றுவித்தவராக விளங்குகிறார். அவரைத் தொடர்ந்து, நாயன்மார்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோர் பக்தி சுவை நனி சொட்டச் சொட்டப்பாடி தமிழிசையால் சைவத்தை வளர்த்தவர். பின்னால் வந்த கச்சியப்பர். சேக்கிழார், தாயுமானவர், குருபரர், வள்ளலார் போன்றோகும் இந்நெறியை மிக வளர்த்தெடுத்து தமிழிசையால் இறைவனைப் போற்றி சைவத்தை மேன்மைப்படுத்தினர். தமிழிசையின் ஒரு வடிவமான சம கீர்த்தனைகளை அண்மைக் காலங்களில் பாடிய முத்துத்தாண்டவர், பாபநாசம் சிவன், மாரிமுத்தாபிள்ளை, அருணாசலக்கவிராயர், விசுவகர்மா போன்றோர். ஏன் தியாகராஜ சுவாமிகள் கூட சிவனின் மீது தமிழிசை(யால்) பாடி பெருமை சேர்த்தனர். இத்தகைய தமிழிசையைப் பாடும்போது பொருளுணர்ந்து, மெய்யுருகி, அர்த்தம் புரிந்து, சொற்களைச் சரியாக உச்சரித்து இசையோடு பாடினால், நாயன்மார்கள் காலத்தில் நடந்த அற்புதங்கள் இன்றும் நடக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே நாமும் தமிழிசையால் சிவனையும் தெய்வங்களையும் மனமுருகிப் பாடி வணங்கி அனைவருக்கும் நன்மை புரிந்து வாழ்வோமாக!